பக்கங்கள் 17+3

# மாலை முரசு


முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 30 வெள்ளிக்கிழமை 14.03.2025 | அதிர்வு 223


## அனுராதபுரம் வன்கொடுமை சம்பவம் சந்தேகநபரின் வீட்டில் கைக்குண்டு மீட்பு!

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் பெண் வைத்தியர் ஒருவரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தில் 02


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இரு தமிழ்ப் பெண்கள் வெட்டிப் படுகொலை!

### மூதூரில் பயங்கரம்

திருகோணமலை, மூதூர் பொலிஸ்பிரிவுக்குட்பட்டதாஹா நகர் பகுதியில் இன்று அதி காலை 4.30 மணியளவில் இரண்டு பெண்கள் வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மூதூர், தாஹா நகர் பகுதியில் ஸ்ரீதரன் தர்ஷினி என்பவருடைய வீட்டிலேயே இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஸ்ரீதரன் ராஜேஸ்வரி (வயது 68) மற்றும் அவரது உறவினரான சக்திவேல் ராஜகுமாரி (வயது74)ஆகியோரேவெட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02

# வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசுக் கட்சி



(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் உள்ளடங்கிய கட்சி முக்கியஸ்தர்கள் செலுத்தினர்.

# தமிழ் மக்கள் கூட்டணியும் கட்டுப்பணம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்குத் தமிழ் மக்கள் கூட்டணி இன்று மதியம் யாழ். தேர்தல்கள் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 17 சபைகளில் 16 சபைகளுக்குத் தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வல்வெட்டித்துறை நகர சபையில் சுயேச்சையாகக் களமிறங்கும் அணிக்குத் தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு வழங்குகின்றது என்று கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.




# உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு நடைபவனி

(எஸ்.நிதர்ஷன்)

உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் விநியோகம் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கு முன்பாக ஆரம்பமான நடைபவனி காங்கேசன்துறை வீதியூடாகச் சென்று, பின்னர் வைத்தியசாலை வீதியூடாக சென்று எஸ்.ரி.எஸ் வைத்தியசாலையை அடைந்தது. பின்னர் வைத்தியசாலையில் விழிப்புணர்வுச் செயலமர்வும் நடைபெற்றது.

குளுக்கோமா நோய் என்பது கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இந்த நோயை ஆரம்பத்தில் இனங்காண்டு சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நோயில் இருந்து குணமடைய முடியும். எனவே, இந்த நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.




லயன்ஸ் கழகம் மற்றும் எஸ்.ரி.எஸ் வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரு தமிழ்ப் பெண்கள்...

இதேவேளை, உயிரிழந்த ஸ்ரீதரன் ராஜேஸ்வரி என்பவரின் 15 வயது மகள் வெட்டுக் காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும், தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

### சந்தேகநபரின்...

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவச் சிப்பாயின் வீட்டில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் வசித்த கல்னேவ வீட்டில் இன்று காலை கல்னேவ பொலிஸார் மற்றும் விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் இணைந்து, சந்தேக நபரால் திருடப்பட்ட பெண் வைத்தியரின் தொலைபேசியைத் தேடுவதற்காக நடத்தப்பட்ட சோதனையின்போதே இந்தக் கைக்குண்டு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

# யாழில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தியது தேசிய மக்கள் சக்தி






(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப் பணத்தைத் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் செலுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சண்முகநாதன் ஸ்ரீபவனந்தராஜா உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் இதன் போது வருகை தந்திருந்தனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மூன்றாந்தரப் போக்கு

இலங்கையில் மிகப் பெரும் கொடூரங்களில் ஒன்றாக விளங்குவது இந்த நாட்டில் நடைமுறையில் நீடிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகும்.

முதலில் ஆறு மாதங்களுக்கு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக கொண்டுவரப்பட்ட இது, 46 ஆண்டுகளாக இந்தத் தீவில் 'பயங்கரவாதம் புரிவதற்கு என்றே' நடைமுறைப்படுத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சட்டமாக நீடிக்கிறது.

'பயங்கரவாதம்' என்ற சொல்லின் அர்த்தம் எதனை சித்திரிக்கின்றது என்ற அடிப்படையே இல்லாமல் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தான் இதில் உள்ள விநோதமும் விபரீதமுமாகும்.

இன விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும், கௌரவ வாழ்வுரிமைக்குமாக நடத்தப்படுகின்ற போராட்டங்களை பயங்கரவாதம் எனச் சித்திரிக்கும் சிங்களத்தின் இந்தச் சட்டம், அதற்கு எதிராக அரசும் படைகளும் புரியும் 'அரச பயங்கரவாதத்தை' சட்டரீதியாக நியாயப்படுத்திக் காப்பாற்றும் பெரும் கொடூரத்தை தொடர்ந்து 46 ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சட்டத்தை கொண்டு வந்த இலங்கையின் அரசுகளே பிற்காலத்தில் இதனைக் கொடூரச் சட்டம் என்ற அடிப்படையில் ஒப்புக்கொண்டு, அதனை மாற்றுவதற்கு அல்லது அடியோடு நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து, அவ்வப்போது அதற்கான முன் முயற்சிகளை ஏற்படுத்திய போதிலும், அது இன்னும் - இன்று வரையிலும் - சாத்தியமாகவில்லை. அதனால் இந்த வரலாற்றுக் கொடூரம் தொடர்கதையாக நீடிக்கின்றது.

1978 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது அல்லது மாற்றுவது என்ற விவகாரம் பிள்ளையார் கல்யாணம் போல நாளை, நாளை என்று தொடர்ந்து வெற்றுப் பேச்சாக இழுபட்டுச் செல்கின்றது.

சுமார் அரை நூற்றாண்டு காலம் நீடிக்கும் இந்தச் சட்டம் இலங்கையின் மிகக் கேவலமான - மிக மோசமான - கோர முகத்தை சர்வதேசத்துக்கு காட்டும் ஓர் அடிப்படையாகும்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தச் சட்டத்தை அடியோடு நீக்குவோம் என்று ஒற்றைக் காலில் நிற்பது போல வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தி, இப்போது அரசுக்கு - அதிகாரத்துக்கு - வந்த பின்னர் இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றி, பயங்கரவாத தடை சட்டம் என்ற பெயரில் புதிதாக ஒன்றைக் கொண்டு வருவது பற்றி பேசுகிறது.

இந்தச் சட்டம் தொடர்பில் புதிய பரிந்துரைகளை முன் வைப்பதற்காக நீதி அமைச்சின் செயலாளர் தலைமையில் துறை சார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும், குழுவின் அறிக்கைக்கு அமைவாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பாக உரிய நடவடிக்கை வெகுவிரைவில் நாடாளுமன்றம் மூலம் முன்னெடுக்கப்படும் என்றும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்திருக்கிறார்.

எதிரணியில் இருந்த போது இந்தச் சட்டத்தை மிகக் கொடூரமான - மிகக் கேவலமான - காட்டுமிராண்டித்தனமான - மனித நாகரீகத்துக்கே ஒவ்வாத - மோசமான சட்டம் என்று விமர்சித்த தேசிய மக்கள் சக்தியினரே, இப்போது அந்தச் சட்டத்தின் அதிகாரத்தை தாங்கள் தங்கள் கைகளின் மூலம் பிரயோகிப்பதற்காக, அதைக் கைவிட முடியாதவர்களாக - அதைத் தொடர்ந்து பேணுபவர்களாக - கதை விடுகின்றார்கள்.

அதிகாரம் வந்ததும் அரசியல்வாதிகள் எவ்வாறு மாறுவார்கள் என்பதற்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பான தேசிய மக்கள் சக்தியினரின் நிலைப்பாடே நல்ல முன்னுதாரணமாகும்.

முன்னைய அரசுகளின் காலத்தில், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றீடு செய்யும் விதத்தில் வேறு சட்டங்கள் கொண்டு வருவது பற்றிப் பேசப்பட்ட போது இந்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்று ஒற்றை காலில் பிடிவாதம் பிடித்தவர்கள், இப்போது வேறு மாற்று சட்டங்கள் ஊடாக அதே கொடூரத்தை தங்கள் அதிகாரமாகத் தொடர்வதற்கு இட்டுக்கட்டி நிற்கின்றார்கள். இதுதான் இந்த நாட்டின் மூன்றாம் தர அரசியல். அதற்கு இந்தச் சட்டமும் அதை வேறு வடிவத்தில் தொடர விரும்பும் தற்போதைய ஆட்சியாளர்களும் நல்ல உதாரணம்தான்...!

# இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் சேவைசெய்ய சபையை வென்றெடுப்போம்!

## பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் தாஜுதீன்

(றிபாஸ்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொத்துவில் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதிகப்படியான வாக்குகளால் கைப்பற்றும் என்று பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் ஏ.எம்.ஏ.தாஜுதீன் தெரிவித்தார்.

பொத்திவில் பிரதேச கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகளையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பொத்திவில் பிரதேசத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுத் தந்தது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்பதை பொத்துவில் மக்கள் மறந்துவிட முடியாது.



இவ்வாறு பொத்துவில் வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கட்சி ரீதியாகத் தெரிவு செய்து தந்த அகில இலங்கை மக்கள் காங்கிரசை ஆதரிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு பொத்துவில் பிரதேச மக்களுக்கு இருக்கிறது என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

அம்பாறை மாவட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு அரசியல் அங்கமாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வளர்ந்து வருகிறது. இதன் அடிப்படையில் பொத்துவில் பிரதேசத்துக்கான அரசியல் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான முயற்சியாக, பொத்துவில் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றுவதன் மூலம் இன, மத பேதங்களுக்கு அப்பால் இதை அபிவிருத்தி அடைந்த ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கு முயற்சிக்க முடியும்.

இந்தப் பிரதேசத்துக்குப் பல்வேறு விதமான வரப்பிரசாதங்களைப் பெற்றுத் தருகிறோம் எனக் கூறி மக்களை பல்வேறு கட்சிகள் ஏமாற்றி வந்த கடந்த கால வரலாற்றை மறந்து விட முடியாது.

இவ்வாறான நிலைமைகளை அறிந்து பொத்துவில் மக்கள் ஒற்றுமையுடன் செயல்படுகின்ற போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக பொத்துவில் பிரதேச சபையை கைப்பற்றுவதன் மூலம் எமது பிரதேசத்தின் ஒற்றுமையை வெளிக்காட்டுவது மட்டுமல்லாமல் அபிவிருத்தியையும் மேற்கொள்வதற்கு அது வாய்ப்பாக அமையும் என்பதை பொத்துவில் பிரதேச வாக்காளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொத்துவில் மக்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரசை ஆதரிப்பதற்கு முன்வர வேண்டும். – என்றார்.

# சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி படுக்கை விரிப்புக்கள்

(றியாஸ் ஆதம்)

ஏ.பி.எஸ். சிமாட் லங்கா நிறுவனத்தால் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.இந்தப் படுக்கை விரிப்புக்களை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது.



வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எம்.ஐ.எம். சதாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், சாய்ந்தமருது வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், ஏ.பி.எஸ். சிமாட் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ரப் அலி, வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஏ.பி.எஸ். சிமாட் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ரப் அலி படுக்கை விரிப்புக்களைக் கையளித்தார்.

சாய்ந்தமருது வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையும், சுகாதார சேவை நண்பர்கள் குழுவும் ஏ.பி.எஸ். சிமாட் லங்கா நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# அராலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களுக்குச் சின்னம் சூட்டல்

அராலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவ தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை -2024 இல் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கல்லூரியின் முதல்வர் கு.பாலமுருகன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் டாக்டர் சு.நித்தியானந்தன், அவரது பாரியார் சரோஜினிதேவி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து சகொண்டனர்.

பிரதம விருந்தினர் தனது உரையில்,

இங்குள்ள இளைஞர்கள், போதைப்பொருள் பாவனையாலும், திறன்பேசி பாவனையாலும் கெட்டு சீரழிந்து செல்லும் போது, இந்தப் பாடசாலையின் பதின்ம வயதினருக்கான, நிகழ்நிலைக் கல்விக்கான சாதனங்களை பெற்றுக் கொள்வது முன்னேற்றமான விடயம். இதனை இம் மாணவர் சமூகம் வினைத்திறனாகப் பயன்படுத்துவது, அராலி மண்ணுக்குக் கிடைத்த சிறந்த பொக்கிஷம் எனக்குறிப்பிட்டார்.



# மன்னார் அல் அஸ்ஹர் பாடசாலைக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் கையளிப்பு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சி.எஸ்.சுலைமான் பௌண்டேசன் அமைப்பால் 8 லட்சம் பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நேற்று வியாழக்கிழமை (13) மாலை பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் உப்பு குளத்தைச் சேர்ந்த மர்ஹூம் ஷேக் சுலைமான் முகம்மது தௌபீக்கின் நினைவாக சி.எஸ். சுலைமான் பௌண்டேசன் அமைப்பால் இந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரம் கையளிக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் திருமதி எஸ்.ஜே.பஸ்மியிடம் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எம். பரந்தாமனால் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது.

இதன்போது பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.






# மைதான புனரமைப்புக்கு 25 லட்சம் ரூபா வழங்கிய சமூக செயற்பாட்டாளர் சசிகுமார் !

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் குட்நிக் மைதானம் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு பிரபல சமூக செயற்பாட்டாளரும் கல்முனை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான தொழிலதிபர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் 25 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

அதற்கான அடிக்கல் நடும் விழா கழகச் செயலாளர் கே.பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது.

1981 ஆம் ஆண்டு, திருக்கோவில் சமூக செயற்பாட்டாளர் வாவியால் தொடங்கப்பட்ட குட்நிக் மைதானம், பல வேலைத்திட்டங்கள் நடந்திருந்தாலும், முழுமையாக அமையாமல் இருந்தது.

இந்தப் பிரமாண்டமான அடிக்கல்



நாட்டு விழாவுக்கு விருந்தினர்களாக பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார், திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். குணபாலன், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.விவேகானந்தராஜா, வர்த்தகர் எஸ். பாஸ்கரன், சமூக செயற்பாட்டாளர் கே. பிரகலாதன், ஆலய குரு சிவஸ்ரீ கிருபாகர சர்மா, பொது அமைப்பு ஒன்றின் செயலாளர் எஸ். சதீஸ்வரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக அமைப்புக்கள், விளையாட்டு கழகங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

8 அணிகளின் உதைபந்தாட்ட வீரர்களுக்கான கழக சீருடை அறிமுகமும் நடைபெற்றது.

குட்நிக் விளையாட்டு கழகத்தினர் தொழிலதிபர் சு.சசிகுமாருக்கு மாலை சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

விழாவில் மற்றும் ஒரு சமூக செயற்பாட்டாளர் பாஸ்கரனும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



# கடல்வளத்தை கூறு போட்டு வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் முயற்சிக்கிறது

## நா. வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

"கடல்வளத்தை கூறு போட்டு குத்தகைக்கு வழங்கும் முயற்சியை அரசாங்கம் மேற்கொள்கின்றது. கடலை சீனாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் தாரைவார்க்க முனைகிறது."

– இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்பொழுது புதிய கடற்றொழில் சட்ட மூலம் ஒன்றை கொண்டுவருகின்றனர். கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட கடற்றொழில் தொடர்பான சட்ட வரைபை தற்போதைய அரசு, சட்ட மூலமாக்க முனைகிறது.

கடந்த அரசின் காலத்தில் அப்போதைய அமைச்சர் இந்த புதிய சட்ட வரைபை கடற்றொழிலாளர் சங்க அங்கத்வர்களை அழைத்து பிரதிகளை வழங்கினார். ஆனால் அப்பிரதியில் நடுப் பகுதி அச்சிடப்படாமல் விநியோகிக்கப்பட்டது.

இப்போது அவ் புதிய சட்டத்தை புதிய அரசு நடைமுறைப்படுத்த முனைகிறது. 1996 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கடற்றொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்.

புதிய சட்ட மூலத்தை நாம் எதிர்க்கிறோம், அந்த சட்ட மூல பிரிதிகளில் என்ன இருக்கிறது என்று இதுவரை மீனவர்களுக்கு தெரியாது.

ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகளை




கூப்பிட்டு கடல்வளத்தை கூறு போட்டு குத்தகைக்கு குடுக்கிற சூழ்ச்சிகளை புதிய அமைச்சர், அரசு முன்னெடுக்கிறது. கடலை சீனாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கு தாரைவார்க்க முனைகிறது.

இது வரைக்கும் கடற்றொழில் சங்கம், சமாசம், சம்மேளனம் புனரமைக்கப்படவில்லை, பழைய நிர்வாகமாக இயங்குகிறது. இதனை புனரமைக்க அமைச்சரால் முடியவில்லை.

எமது கடலில் உள்ளூர் இழுவைப் படகுகள், சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த முடயவில்லை.

கடலில் அந்திய நாட்டு மீன்பிடி படகுகள் கபளிகரம் செய்துள்ளன. இன்று சாப்பிட வழியில்லாமல் இருக்கிறது. பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன.

தற்போதைய கடற்றொழில் அமைச்சருக்கு கடற்றொழில் என்றால் என்ன என்பதே தெரியாது. அவருக்கு கடற்றொழிலை எப்படி வழி நடத்த வேண்டும் என்பது தெரியாது. மீன்பிடி தொழிலால் எவ்வளவு அந்நியசெலாவணியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற அறிவும் இல்லை.

கடற்றொழில்அமைச்சர்கடற்றொழில் சார்ந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை. அதைவிடுத்து தேவையில்லாத வேலைகளை மாத்திரம் மேற்கொண்டு வருகின்றார். தற்போதைய சட்டத்துக்கு அமைவாக வெளிநாடுகளுக்கு குத்தகை அடிப்படியில் எமது கடல் பிராந்தியங்களை வழங்கி, தங்கள் கோடி கோடியாக பணத்தை சம்பாதிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

உண்மையில் எந்த அரசாங்கமும் மக்களுக்காக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்து மாற்றத்தை கொண்டுவருகிறோம் என்று தெரிவித்தது. ஆனால் இதுவரையும் எதனையும் செய்யவில்லை.

யுத்த காலத்தில்கூட நாங்கள் நின்மதியாக தொழில் செய்தோம். ஆனால், தற்பொழுது அந்த நிலைமை இல்லை. " – என்றார்.

# எண்ணெய் பரல்களைக் கடத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது!

(பாறுக் ஷிஹான்)

கடை ஒன்றின் முன்பாக வைக்கப்பட்டிருந்த எண்ணெய் பரல்களை வாகனம் ஒன்றில் கடத்திய சந்தேக நபரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் முன்பாக உள்ள பலசரக்கு கடை ஒன்றில் நேற்று (13) அதிகாலை எண்ணை பரல்கள் களவாடப்பட்டுள்ளன என்று அதன் உரிமையாளரால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய கல்முனை பிராந்திய உதவிப்



பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோசனைக்கு அமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் வழிகாட்டலில் செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையிலான பொலிஸார் விரைந்து செயற்பட்டு மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதிக்கு களவாடி எடுத்துச் செல்லப்பட்ட பரல்களை மீட்டுள்ளனர். கடத்தச் செல்லப் பயன்படுத்திய வாகனத்தையும் பறிமுதல் செய்ததுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

ஏனைய தப்பிச் சென்றுள்ள இரு சந்தேக நபர்களையும் சிசிடிவி காணொளிகள் மற்றும் ஏனைய தகவல்களின் ஊடாகக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புபட்ட 22 வயதுடைய சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் மகளிர் தின நிகழ்வு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பு மற்றும் மாத்தறை மாவட்ட சிகரம் மலையக பெண்கள் சம்மேளனம் இணைந்து நடத்தவுள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வு தெனியாய கொட பொல நகர மண்டபத்தில் நாளை சனிக்கிழமை (15) பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் என்டனி ஜேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காணி, வீடு, கல்வி மற்றும் அடிப் படை உரிமைகளை உறுதி செய்வதன் ஊடாக மலையகப் பெண்களின் அபிவிருத்தியை மேம்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் இடம்பெற வுள்ள மகளிர் தின நிகழ்வின் பிரதம அதிதியாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி சரோஜா போல்ராஜ் கலந்து கொள்ளவுள் ளார்.



# காயத்திரி கிராமத்துக்கு குடிதண்ணீர் வசதி!

(வி.ரி.சகாதேவராஜா)

வன்னிகோப் அமைப்பின் ஏற்பாட்டில் திருக்கோவில் -4 காயத்திரிபுரம் கிராமத் தில் குடிதண்ணீர் வசதியற்ற 25 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வேண்டுகோ ளுக்கு அமைவாக இந்த உதவி வழங் கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த், வன்னி கோப் அமைப் பின் இனைப்பாளர் எஸ்.தர்மராஜா திருக்கோவில்- 4 கிராம உத்தியோகத் தர் , பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர் , சமுர்த்தி உத்தியோகத் தர், கிராம அபிவிருத்தி சங்கத்தி னர் மற்றும் பயனாளர்கள் கலந்து கொண்டனர்.



# மஸ்கெலியா மவுசாகலை தோட்டம் முத்துமாரியம்மன் கும்பாபிஷேகம்

(மஸ்கெலியா )

தட்சண கைலாயம் என்று போற்றப் படும் சிவனொளிபாதமலை அடிவாரத் தில் அமைய பெற்றிருக்கும் மஸ்கெ லியா மவுசாகலை தோட்டம் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அனாவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் 10.45 மணி வரையுள்ள சுப முகூர்த்த சுப வேளை யில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குடமுழுக்கு விழாவை முன் னிட்டு நாளை சனிக்கிழமை காலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி மாலை சாந்தி கிரியைகள் நடைபெறும்.

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம் பமாகி நவகிரகஹோமம், அடியார்கள் கங்கா தீர்த்தம் எடுத்து வரும் நிகழ்வு, மாலை சுவாமிகளுக்கு கண் திறக் கும் நிகழ்வு என்பன இடம் பெற்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை திருக் கொடியேற்றத்துடன் விக்கிரங்கள் பிரதிஷ்டை செய்யப்படும்.

18 ஆம் திகதி காலை 6.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை அடியார் கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டு டன் கிரியைகள் ஆரம்பமாகி காலை மஹா கும்பாபிஷேகம் நடைப்பெறும்.

# காரைதீவு விபுலானந்தா மைதான விளையாட்டரங்கம் சீரழிவு!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்த விளையாட்டு மைதானத்தில் உள்ள விளையாட்டரங்கம் தினம் தினம் சீரழிந்து வருகின்றது .

சுனாமிக்கு பின்னர் நிறுவனமொன்றால் அமைக்கப்பட்ட இந்த நவீன ரக விளையாட்டரங்கம் இன்று பாவிக்க முடியாத நிலைக்கு மாறியுள்ளது.

மேலுள்ள தகரங்கள் எந்நேரமும் கீழே விழக்கூடிய அபாயம் உள்ளது. மழைக்கோ வெயிலுக்கோ நிற்க முடியாத ஒரு அவல நிலையும் நிலவுகிறது.

விளையாட்டரங்கம் என்று ஓட்டை ஒடிசலாக இருக்கின்றது தவிர இதனால் எந்த பலனும் இல்லை.

அண்மையில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டத்திலும் இது தொடர்பில் பேசப்பட்டது. ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக விரைந்து இந்த விளையாட்டரங்கைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும். இன்றேல் பாரிய அனர்த்தத்தை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று விளையாட்டு வீரர்களும் பொதுமக்களும் கேட்டுக் கொள்கின்றனர்.

# வளரியின் ‘பெண் எனும் பெருநதி’ கவிதைத் தொகுப்புக்கு ஆக்கம் கோரல்

(வி.ரி.சகாதேவராஜா)

“வளரி” வெளியிடும் ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

கடந்த 16 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் இருந்து கவிதைக்காக வெளிவந்து கொண்டிருக்கும் “வளரி” கவிதை இதழ் இலங்கையில் வசிக்கும் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பொன்றை ‘பெண் எனும் பெருநதி’ என்ற பெயரில் வெளியிடவுள்ளது.

மே மாதம் இலங்கையில் நடைபெற விருக்கும் விழாவில் வெளியிடப்படவுள்ள இந்தக் கவிதைத் தொகுப்புக்கு இலங்கையில் வசிக்கும் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகளைக் கீழ்கண்டவாறு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கவிதைகள் 30 வரிகளுக்குள் அமைய வேண்டும், பெண்களின் நிலை குறித்த கவிதைகளாக மட்டுமே இருக்க வேண்டும் , இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமே கவிதைகளை அனுப்ப வேண்டும், ஒருவர் ஒரு கவிதை மட்டுமே அனுப்ப வேண்டும், மார்ச் 31ஆம் திகதிக்குள் கவிதைகளை அனுப்ப வேண்டும்

எயடயசனிழநஅள09ளூபஅயடை. உழஅ என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பிவைக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு 78715 48146 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டு.தன்னாமுனையில் இரத்ததானம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு தன்னாமுனை சென்.ஜோசப் கல்லூரியின் 150 ஆவது ஜூபிலி ஆண்டை முன்னிட்டு பழைய மாணவர் ஒன்றியம் நேற்று வியாழக்கிழமை (13) கல்லூரி மண்டபத்தில் இரத்ததான நிகழ்வை நடத்தியது.

கல்லூரி அதிபர் ஆர்.ஐ.ராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் வைத்தியர் க..விவேகானந்தநாதன், இரத்தவங்கி ஊழியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது தன்னாமுனை ஜோசப் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர்.



# கிழக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்கள இப்தார் நிகழ்வு!

(அபு அலா )

கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்தி திணைக்கள மண்டபத்தில் நேற்று (13) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி எஸ்.வர்ணி தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.நஸீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஏ.எம்.எம்.ரபீக் கௌரவ அதிதியாகவும், கிழக்கு மாகாண காணி ஆணையாளர் திருமதி வளர்மதி ரவீந்திரன் மற்றும் முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஏ.ஜீ.எம். பசால் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்துகொண்டனர்.














# யாழ். கொக்குவில் இந்து முன்பள்ளியின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து முன்பள்ளியின் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் தலைவர் ச.பிரதாபன் தலைமையில் கொக்குவில் இந்து கல்லூரியின் "பஞ்சலிங்கம் அரங்கில்" நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பிராசா சிவகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது விருந்தினர்களும் மாணவர்களும் மங்கள வாத்தியங்களுடன் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. தொடர்ந்து விருந்தினர்கள் உரைகள் இடம்பெற்று நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.














# சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவித்திட்டமும் வாராந்த நிகழ்வாக தெய்வீக இன்னிசையும்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவித்திட்டமும் வாராந்த நிகழ்வாக தெய்வீக இன்னிசையும் இன்று (14) தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் அமுதகலாசுரபி கலாநிதி செ. மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றன.

தெய்வீக இசை நிகழ்வில், நுண்கலைமாணி திருமதி கிமாலினி சுகந்தனின் தெய்வீகப் பாடல்கள் இடம்பெற்றன.

இந்தப் பாடல்களுக்கு ஹார்மோனியம் – இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் – கலாவித்தகர் க.சிவ குமார், தபேலா – வித்துவான் ப.கபிலன் ஆகிய அணிசெய் கலைஞர்களாகச் செயற்பட்டனர்.

இந்நிகழ்வில் வைத்து ஆச்சிரம உதவித்திட்டங்களாக, கோப்பாய் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, கட்டட கட்டுமானப் பணிக்காக 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் இதனை வழங்கி வைத்தார்.









# உக்ரைனில் போர் நிறுத்தம்: ஜெலன்ஸ்கியின் சரணடைவா ?

● **ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ரஷ்யாவுடனான போர் நிறுத்தத்துக்கான அமெரிக்காவின் முன்மொழிவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்று உக்ரைன் தற்போது கூறியுள்ளது. போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக, அமெரிக்கா – உக்ரைன் இடையே இவ்வாரம் சவூதி அரேபியாவில் பேச்சு நடத்தப்பட்டது.

ரஷ்யா இந்த போர் நிறுத்தத்தை எப்படி எதிர்கொள்ளும் என்பதுதான் முக்கிய கேள்வியாக உள்ளது. ஏனெனில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இன்னும் போர் நிறுத்த முன்மொழிவுக்கு இதுவரை பதிலளிக்கவில்லை.

இதேவேளை போர் நிறுத்தத்திற்கான இராஜதந்திர பேச்சுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், உக்ரேன் போர்க்களத்தில் பாரிய பின்னடைவை சந்தித்து வருவதாக கூறப்படுகிறது. கூர்ஸ்க் (முரசளம) பகுதியில் உக்ரைனிய படைகள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி பின்வாங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

### முப்பது நாள் போர் நிறுத்தம்

பேச்சு முடிந்த பின் அமெரிக்கா – உக்ரைன் கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில், அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட முப்பது நாள் இடைக்கால போர் நிறுத்தத்தை உடனடியாக ஏற்க உக்ரைன் தயாராக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளது.

இந்த போர் நிறுத்தக் காலம் இரு தரப்பினரின் பரஸ்பர ஒப்பந்தத்தால் நீட்டிக்கப்படலாம். இது ரஷ்ய கூட்டமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனேயே செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, ரஷ்யா ஏற்றுக்கொண்டவுடன் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அமெரிக்கா உடனடியாக உக்ரைனுக்குப் பாதுகாப்பு உதவியை மீண்டும் வழங்கும் எனத் தெரிவித்துள்ளது.

ஆயினும் பந்து இப்போது ரஷ்யாவின் கைகளில் இருக்கிறது என்றும், ரஷ்யர்கள் முடிந்தவரை விரைவாக இதற்கு ஒப்புக்கொள்வார்கள் என்பதே எங்கள் நம்பிக்கை எனவும் பேச்சு முடிந்த பின் செய்தியாளர்களிடம் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்தார்.

ரஷ்யா – உக்ரைன் என இருநாடுகளும் கூடிய விரைவில் முழுமையான உடன்பாட்டுக்கு வருவதை அமெரிக்கா விரும்புகிறது. போர் தொடரும் ஒவ்வொரு நாளிலும் மக்கள் இறக்கிறார்கள். இந்த மோதலில் இருதரப்பிலும் மக்கள் காயமடைகிறார்கள். யார் போர் நிறுத்தத்துக்குச் சம்மதிக்கவில்லை என்றால் அமைதிக்கு தடையாக யார் இருப்பது என்பது தெரியவரும்.

அமெரிக்காவில் இது தொடர்பாகப் பேசிய அதிபர் டிரம்ப், சில நாள்களுக்குள் போர் முடிவடையும் என

தொடர்ச்சி▼





# உக்ரைனில் போர் நிறுத்தம்: ஜெலன்ஸ்கியின் சரணடைவா ?

தொடர்ச்சி ▲

நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். போர் நிறுத்தத்தை ஒட்டி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் மீண்டும் பேச்சு நடத்தக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா ஒப்புக் கொள்ளுமா?

தற்போது ரஷ்யா இந்த போர் நிறுத்தத்தை எப்படி எதிர்கொள்ளும் என்பதுதான் முக்கிய கேள்வியாக உள்ளது. ஏனெனில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இன்னும் போர் நிறுத்த முன்மொழிவுக்கு பதிலளிக்கவில்லை.

இதேவேளை ஒரு மாதகால போர் நிறுத்தத்தை ரஷ்யா ஏற்றுக்கொள்ளும் என்பதற்கான எந்த பொது அறிகுறியும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, நேட்டோவின் அச்சுறுத்தல் அற்ற, ரஷ்யாவின் நீண்டகால பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு ஒப்பந்தத்தை மட்டுமே ரஷ்யா நாடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சில மாதங்களுக்கு முன் போர் நிறுத்தம் தொடர்பாக பேசிய புடின், ஒரு குறுகிய போர் நிறுத்தம் உக்ரைனுக்கான மீள் ஆயுதமாக்கக் காலமாக இருக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளார். ரஷ்யாவுக்கு நீண்டகால நீடித்த அமைதி மட்டுமே தேவை என்று புடின் தெரிவித்திருந்தார்.

இந்த யுத்த நிறுத்தம் கடலிலும் வானத்திலும் பகுதியளவு என்ற ஜெலென்ஸ்கியின் முன்மொழிவுக்கு அப்பால் முழுமையான போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்துகிறது.

சவூதி ஜெட்டாவில் நடந்த பேச்சின் ஆக்கபூர்வமான முடிவுகள் குறித்து இதுவரை தீர்மானிக்க முடியவில்லை. எனினும், பேச்சு தொடர்பில் மொஸ்கோ இன்னும் பதில் அளிக்கவில்லை. பேச்சின் முடிவுகள் குறித்து வொஷிங்டனால் விளக்கமளிக்கப்பட்ட பின்னர் ரஷ்யா ஒரு அறிக்கையை வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா 2022 பெப்ரவரியில் உக்ரேன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியது. தற்போது அது உக்ரேன் பிரதேசத்தில் சுமார் இருபது விகித நிலக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

இதேவேளை, போர் நிறுத்தத்துக்கான இராஜதந்திர பேச்சு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், உக்ரேன் போர்க்களத்தில் பாரிய பின்னடைவை சந்தித்து வருவதாக கூறப்படுகிறது.

**கூர்ஸ்க்கில் பின்வாங்கும் உக்ரைன்**

குறிப்பாக கூர்ஸ்க் (Kursk) பகுதியில் உக்ரைனிய படைகள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி பின்வாங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.



கூர்ஸ்க் போர் நடவடிக்கையிலிருந்து உக்ரைன் பெற்ற ஆரம்பகால வெற்றிகள் அனைத்தையும் தற்போது இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அங்கே உக்ரைனிய வீரர்கள் சுற்றி வளைக்கப்பட்டாலோ அல்லது கடுமையான துப்பாக்கிச் சூட்டின் கீழ் பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலோ அது பெரும் உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

கடந்த சில வாரங்களாக கூர்ஸ்கில் ஏற்பட்ட தோல்வி, தொடர்ச்சியான பலத்த அடிகளுக்குப் பிறகு ஜெலென்ஸ்கி மீதான போர் நிறுத்த அழுத்தத்தை தீவிரப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 28 அன்று டிரம்புடனான அவரது அவமானகரமான வெள்ளை மாளிகை சந்திப்பு நடைபெற்றது. தற்போது சாத்தியமான சமாதானப் பேச்சுகளில் அவரது கையை பலவீனப்படுத்தும் வகையில் கூர்ஸ்க் தோல்வி அமையவுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 15 அன்று உக்ரைன் தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கு ஒரு இராணுவ நிர்வாகத்தை நிறுவியது. ஒக்ரோபர் தொடக்கத்தில் உக்ரைனின் முன்னேற்றம் நின்றுவிட்டது. ஆனால் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் முதல் பாதியில், ரஷ்யாவின் தாக்குதலின் போது உக்ரைன் ஆக்கிரமித்துள்ள பிரதேசத்தில் பாதியை ரஷ்யப் படைகள் மீட்டெடுத்தன.

அண்மையில் மார்ச் 11, 2025 அன்று, ரஷ்ய மற்றும் வட கொரியப் படைகளின் எதிர் தாக்குதலின் விளைவாக பெரும்பாலான உக்ரைனியப் படைகள் கூர்ஸ்க் நகரில் இருந்து பின்வாங்கி வெளியேறி வருகின்றன என்றும் களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




# இந்தியாவில் முதல் முறையாக தமிழ் மொழியில் ரூபா சின்னம்

ஹிந்தி மொழியில் அமைந்த ரூபாய் சின்னத்தை தமிழ் மொழிக்கு மாற்றி அமைக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் என்பதில் 'ரூ' எழுத்தை மாத்திரம் நாணயப் பெறுமதியை குறிக்க பயன்படுத்தும் வகையில் புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தமிழக சட்டமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படும் 2025/26 நிதியாண்டுக் கான வரவு செலவுத்திட்ட அறிக்கை யில் இந்த மாற்றம் கொண்டுவரப் பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் மும்மொ ழிக் கொள்கை கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமி ழக மாநில அரசினால் இந்த புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாநிலமொன்றில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவது இந்திய வறலாற்றில் இதுவே முதல்முறை யென இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தமிழக வரவு- செலவு திட்டம் இன்று சட்ட சபையில் தாக்கல்

தமிழக சட்டசபையில், இந்த ஆண் டுக்கான முதல் கூட்டம் கடந்த ஜன வரி மாதம் கூடியது. ஆளுநர் ஆர். என்.ரவி உரை நிகழ்த்தும் நிகழ்வோடு தொடங்கி அந்த கூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது.

சட்டசபையின் அடுத்த கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது. காலை 9.30 மணிக்கு சட்டசபையில் 2025-2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை நிதித்துறை



அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

இந்த நிலையில், இன்று தாக்கல் செய்யப்படும் தமிழ்நாடு வரவு-செலவு திட்டத்தை சென்னையில் 100 இடங் களில் நேரலை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதன்படி சென்னை எழும்பூர், சென்ட்ரல் ரெயில் நிலையங்கள், மெரினா கடற்கரை, பாண்டி பஜார் சாலை, டைடல் பார்க் சந்திப்பு, கிண்டி பஸ் நிலையம் என மக்கள் அதிகம் கூடும் 100 பகுதிகளில் பட்ஜெட் நேரலை செய்யப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.

# த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் நியமனத்தில் தொடரும் இழுபறி

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் நியமனத்தில் இழுபறி நீடித்து வரு வதாக கட்சி நிர்வாகிகள் தரப்பில் கூறப்படுகிறது. இதற்கிடையே, த.வெ.க. தலைவர் விஜய்யிடம் மனு அளிக்க வந்த பெண்ணுடன் நிர்வா கிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

த.வெ.கவில் அமைப்பு ரீதியாக 120 மாவட்டங்ஙள் பிரிக்கப்பட்டுள்ளன. இதுவரை 95 மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்ட நிலையில், இறுதிகட் டமாக 25 மாவட்டச் செயலாளர்களை விஜய் நேற்று அறிவிப்பார் என்று எதிர்பார்ப்பு நிலவியது. அந்த வகை யில், நிர்வாகிகளை நேர்காணல் செய்து பொறுப்புகளை அறிவிப்பதற் காக கட்சித் தலைவர் விஜய் பனையூரில் உள்ள தலைமையகத் துக்கு நேற்று சென்றார்.

தொடர்ந்து,25மாவட்டங்களுக்கான நிர்வாகிகளை அறிவிக்க வேண்டிய நிலையில் கரூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 19 மாவட்டங்களுக்கான நிர்வாகிகளை மட்டுமே விஜய் இறுதி



செய்தார். அதில், சென்னை தெற்கு மேற்கு மாவட்டச் செயலாளராக விஜய்யின் உதவியாளர் மகன் சபரி நாதனுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதற்கு கட்சியினர் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்ததாக கூறப்படுகிறது.

இதேபோல், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் நியமனத்தில் தொடர்ந்து இழுபறி நீடிப்பதாகவும், சில மாவட்டங்களில் நியமிக்கப் பட்டவர்களுக்கு எதிராக நிர்வாகிகள் போர்க்கொடி தூக்கினர் எனவும் த.வெ.க. வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

இது தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் செய்தியா ளர்களிடம் கூறும்போது,

"சபரிநாதனின் தந்தை 35 ஆண்டு களாக தலைவரோடு பயணித்தவர். சபரிநாதனும் சிறு வயது முதலே ரசிகராக இருந்து, பெயர்ப்பலகை திறந்து வைப்பது உள்ளிட்ட பணி களை ஆற்றியுள்ளார்.

அந்த வகையில் தலைவரின் ரசி கர்களுக்கு பொறுப்பு வழங்கியுள் ளோம். தலைவர் உழைத்தவர்களை அடையாளம் கண்டு பதவி வழங்கி யுள்ளார். எனினும், ஒரு சிலர் வேண் டுமென்றே சலசலப்பை உண்டாக்க நினைக்கின்றனர். அது தவெகவில் நடக்காது. மீதமுள்ள 6 மாவட்டங்க ளுக்கும் விரைவில் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவர். அதைத் தொடர்ந்து நல்ல செய்தி ஒன்று வெளியாகும்." என்றார்.

# அணு ஆயுதங்களை நிலைநிறுத்துவதற்கு அமெரிக்காவிற்கு போலந்து அழைப்பு




ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் சுமார் 3 வருடங்களாக நீடித்து வரும் நிலையில் தங்கள் நாட்டிற்கும் அணு ஆயுத பாதுகாப்பு தேவை என 'நேட்டோ' நாடுகளில் ஒன்றான போலந்து வலியுறுத்தியுள்ளது.

உக்ரைன், பெலாரஸ் மற்றும் ரஷ்யாவின் கலினின்கிராட் ஆகிய வற்றுடன் போலந்து தனது எல்லையை பகிர்ந்து கொள்கிறது.

இந்நிலையில், ரஷ்யாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தங்கள் நாட்டில் அணு ஆயுதங்களை நிலை நிறுத்த வேண்டும் என அமெரிக்காவுக்கு போலந்து ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தற்போது பிரான்ஸ் மட்டுமே அணு ஆயுதங்களை கொண்டுள்ளது.

சமீபத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், ரஷ்யாவின் அச்சுறுத்தல்களிலிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாக்க பிரான்ஸ் நாட்டின் அணு ஆயுத சக்தியை பயன்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக பிரான்ஸ் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கடந்த வாரம் போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் போர்நிறுத்த திட்டத்தை நிராகரித்தது ரஷ்யா



அமெரிக்காவின் போர்நிறுத்த திட்டத்தை ரஷ்யா நிராகரித்துள்ளதுடன், இது உக்ரைனுக்கு மாத்திரமே தற்காலிக ஓய்வு அளிக்கும் என தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான ஆலோசகர் யூரி உஷாகொவ் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்திற்கு ரஷ்யாவை ஒப்புக்கொள்ள வைப்பதற்கான முயற்சியாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வோல்ட்ஸ் நேற்றைய தினம் யூரி உஷாகோவுடன் நடத்திய தொலைபேசி கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி ஏற்கனவே அமெரிக்காவின் இந்த திட்டத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளார்.

இதேவேளை, பெலாரஷ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவைச் சந்தித்த பின்னர், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் போர் நிறுத்த திட்டம் குறித்து கருத்து தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே நேட்டோ அமைப்பின் தலைவர் மார்க் ருட்டே நேற்று பிற்பகல் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

# பிற நாடுகள் மீதான வரி விதிப்பு பாதிப்பை மாத்திரமே ஏற்படும்

## அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு ஐ.நா. அதிருப்தி



பிற நாடுகளின் மீது வரி விதிக்கும் முடிவால் பாதிப்பு மாத்திரமே ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறையாக பொறுப்பேற்றது முதல் ட்ரம்ப்,பல்வேறு அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக, சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுக்கத் தவறியதற்காகவும், போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்தாதற்கும், மெக்சிகோ, கனடா மீது தலா 25 சதவீத வரிகளையும், சீனா மீது 10 சதவீத வரியையும் விதித்தார்.

இதற்குப் பதிலடியாக, அமெரிக்கா மீது 25 சதவீத வரிகளைக் கனடா விதித்தது.

அதேபோல, உலகின் அனைத்து நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் அலுமினியத்துக்கு 25 சதவீதம் கூடுதல் வரி விதிப்பும் அமுலுக்கு வந்தது.

உலக நாடுகள் மீது வர்த்தகப் போரை தொடுத்தால், அனைத்தையும் இழக்க நேரிடும் என்று அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 14/03/2025

## டிராம்ப் வரி அதிகரிப்பிற்கு கியூபெக்கோ கட்சி அதிருப்தி

கனடாவின் புளொக் கியூபிக்கோ Bloc Québécois கட்சி தலைவர் ஈவ்ஸ்-ஃபிரான்சுவா பிளாஞ்செட், டொனால்ட் ட்ரம்ப் விதித்த புதிய வரிகள் குறித்து கடுமையாக விமர்சித்துள்ளார். 02



# கனடாவின் 24 ஆவது பிரதமராக மார்க் கார்னி இன்று பதவியேற்பு

**லிபரல் கட்சியின் மார்க் கார்னி இன்று தனது அமைச்சரவையுடன் இணைந்து கனடாவின் 24 ஆவது பிரதமராக உத்தியோகபூர்வமாக பதவி யேற்கின்றார். லிபரல் கட்சித் தலைமை தேர்தலில் 131,674 வாக்குகள் பெற்று முதல் சுற்றிலேயே வெற்றி பெற்ற கார்னி, தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் இருந்து அதிகாரத்தை பெற்றுக்கொள்ள உள்ளார்.**

பிரதமர் மற்றும் கனடிய அமைச்சரவையின் பதவியேற்பு விழா ஒட்டாவாவில் உள்ள ரிடோ ஹால் மண்டபத்தில் இன்று காலை 11 மணிக்கு நடைபெறும் என ஆளுனர் நாயகம் மேரி சைமன் அலுவலகம், உறுதி செய்துள்ளது.ஒட்டாவா மற்றும் அதன் வெளியே உள்ள முக்கிய அதிகாரிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டு, அதிகார மாற்றத்தை வெற்றிகரமாகச் செய்ய அரசு தரப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# கஞ்சா போதைப்பொருள் கடத்திய மூவர் கைது

கஞ்சா போதைப் பொருள் கடத்திய மூன்று பேரை டொரொண்டோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி மூவரும் போதைப் பொருள் கடத்தல் குழுவின் முக்கிய உறுப்பினர்களாக இருக்கின்றனர் எனவும் கனேடிய கஞ்சாவை பயணப்பைகளில் வைத்துப் பிரிட்டன் வரை கடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.

டொரொண்டோ பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்பு பிரிவும் அவசர நடவடிக்கை பிரிவும் மார்ச் 5 அன்று மார்கம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சோதனை மேற்கொண்டனர்.



02




# கனடா தேர்தலில் சீனா உள்ளிட்ட நாடுகள் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தக்கூடும்

கனடாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் செல்வாக்கு செலுத்தவும், வாக்காளர்களை தவறாக வழிநடத்தவும் சீனா, ரஷ்யா மற்றும் ஈரான் உள்ளிட்ட பல நாடுகள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தக்கூடும் என்று கனேடிய சைபர் புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

கனடாவின் சைபர் புலனாய்வுப் பிரிவு, 28 பக்க அறிக்கையில், கனடாவில் தேர்தல் பிரச்சாரங்கள் மற்றும் வாக்களிப்பில் செல்வாக்கு செலுத்த இந்த நாடுகள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த அதிக வாய்ப்புள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு செயல்பாடு குறித்து கனடாவில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் மிகவும் விழிப்புடன் இருக்குமாறு சைபர் புலனாய்வுப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடாவின் லிபரல் ஆளும் கட்சியின் புதிய தலைவராகவும், கனடாவின் பிரதமராகவும் பொறுப்பேற்கும் மார்க் கார்னி, ஒக்டோபர் 20 ஆம் திகதிக்கு முன்னர் எந்த நாளிலும் பொதுத் தேர்தலை நடத்த அதிகாரம் பெற்றுள்ளார் எனவும் மிகக் குறுகிய காலத்தில் அவர் பொதுத் தேர்தலை அறிவிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## டிரம்ப் வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வரி விதிப்பு அதிகரிப்பு ட்ரம்பின் தோல்வியின் அங்கீகாரமாகத் தெரிகிறது என தெரிவித்துள்ளார்.

25 வீத வரி மட்டுமே நம்மை முடக்க போதுமானது என்று அவர் நினைத்திருந்தால், அதில் திருப்தி அடைந்திருப்பார்.

ஆனால் இப்போது அலுமினியத்துக்கும் உருக்கிற்கும் 50 வீத வரி விதிக்கிறார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் ஒன்டாரியோவை தண்டிக்க, கியூபெக்கின் பொருளாதார விருப்பங்களை பயன்படுத்துகிறார் எனவும் இது மிகவும் விசித்திரமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ட்ரம்ப் விதிக்கும் 5 வீத வரி, அமெரிக்காவிற்கே பொருளாதார சுமையை ஏற்படுத்தும் என்று பல பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.





# வேலை இழப்பு குறித்த பதற்றம் கனடியர்கள் மத்தியில் அதிகரிப்பு

கனடியர்கள் மத்தியில் வேலை இழப்புக்கள் குறித்த பதற்றம் அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட புதிய கருத்துக்கணிப்பின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் நடக்கும் வர்த்தக போரின் விளைவாக வேலை இழப்புக்கான அச்சம் ஏற்படுத்துவதாக 40 வீதமான கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.

பல தொழில் நிறுவனங்கள் வேலை வாய்ப்புகளை குறைக்கத் தொடங்கியுள்ளமையும் இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


மார்ச் ஏழாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை 1,500 இற்கும் மேற்பட்ட கனடியர்களிடம் இது தொடர்பில் கருத்து கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதில், ஒண்டாரியோ மாநிலத்தில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலை பாதுகாப்பு தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இது நாட்டின் மிக அதிகமான விகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வேலை இழப்புக்கள் தொடர்பில் பெண்களை விடவும் ஆண்கள் அதிக ளவு கரிசனை கொண்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து தரப்பிலும் வேலை இழப்புக்கான அச்சம் இருப்பதால், கனடாவின் பொருளாதாரத்தில் நெருக்கடி நிலவி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய ஒருவருக்கு 7 ஆண்டுகள் சிறை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவருக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த ஸ்டீவன் மார்லோ கல்லாகர் (வயது 32) என்ற நான்கு குழந்தைகளின் தந்தைக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் திகதி ஒசோயூஸில் (Osoyoos) நடந்த கனடா தின கொண்டாட்டத்தின் போது, மக்கள் நிரம்பிய கடற்கரையில் அவர் துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தார்.

இந்த சம்பவத்தில் ஒருவர் காயமடைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தினால் பலர் பீதியடைந்த னர் எனவும் அந்தப் பாதிப்பு இன்னமும் சிலருக்கு நீடித்து வருவதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.